**செய்தி வெளியீடு எண் : 289** **நாள்: 27.02.2022**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதிபதி அபய் மனோகர் சாப்ரே (ஓய்வு), சாலைப் பாதுகாப்புக்கான மாண்புமிகு உச்ச நீதிமன்றக் குழுவின் தலைவர், அவரது சட்ட உதவியாளர் ஹர்ஷித் கந்தாருடன், இன்று (27.02.2022) சென்னையில் சாலைப் பாதுகாப்பு ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார். போக்குவரத்து, காவல்துறை, சுகாதாரம், நெடுஞ்சாலைகள் மற்றும் கல்வித் துறை போன்ற பங்களிப்பு துறைகளால் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து சாலைப் பாதுகாப்புக் குழுவின் மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைவர் அவர்கள் விளக்கினார். இந்த விவாதத்தின் போது, உயிரிழப்பை ஏற்படுத்தும் விபத்துகளைத் தடுக்க அமலாக்க நடவடிக்கைகள் இன்னும் கடுமையாக இருக்க வேண்டும் என்று தலைவர் வலியுறுத்தினார். அதிவேகம் மற்றும் குடிபோதையில் வாகனம் இயக்குவதால் பெரும்பாலான சாலை விபத்துகள் ஏற்படுவதாகவும், விதிமீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க போக்குவரத்து மற்றும் காவல் துறை செயலாக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். ANPR (தானியங்கி வாகன பதிவெண் பலகை உணர் கருவி) மற்றும் CCTV கேமராக்கள் முழுமையாக செயல்படும் வகையில் பராமரிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் அறிவுறுத்தினார்.

மேலும், சாலைப் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு ஒவ்வொரு சாலை பொறியியல் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என நெடுஞ்சாலை துறையினருக்கு அறிவுறுத்தினார். அவ்வாறு பணிகள் மேற்கொள்ளப்படும் போது தரத்தில் எந்த வகையிலும் சமரசம் செய்யக்கூடாது என்று தலைவர் குறிப்பாக வலியுறுத்தினார்.

செயலாக்கப் பணிகளில் இன்டர்செப்டர் வாகனங்கள் முழுமையாக பயன்படுத்தப் பட வேண்டும் எனவும் இதன் மூலம் அவசர சிகிச்சை மையங்களின் தேவையை வெகுவாக குறைக்கலாம் என்றும் தலைவர் வலியுறுத்தினார்.

தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “நம்மைக் காக்கும் 48” திட்டத்தை சாலைப் பாதுகாப்புக் குழுவின் மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைவர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

சாலைப் பாதுகாப்பு குறித்த பங்களிப்பு துறைகளின் பல்வேறு செயல்திறன்களை ஆய்வு செய்த பின்னர், சாலைப் பாதுகாப்புக் குழுவின் மாண்புமிகு உச்ச நீதிமன்றக் தலைவர், தமிழக அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளைப் பாராட்டியதோடு, சாலைப் பாதுகாப்பில் நமது நாட்டிலேயே தமிழ்நாடு முன்மாதிரியாக இருப்பதாக மேலும் பாராட்டினார். ஒவ்வொரு மனிதனின் உயிரும் அந்தந்த குடும்பத்திற்கு மட்டுமின்றி சமுதாயத்திற்கும், தேசத்திற்கும் மதிப்பு வாய்ந்தது என்பதை வலியுறுத்தி சாலைப் பாதுகாப்பை ஒரு வாழ்க்கை முறையாக ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கமாறு தமிழக மக்களைக் கேட்டுக் கொண்டு கூட்டத்தை நிறைவு செய்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**